සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

## குடியியற் கல்வி - පුරවැසි අධ්‍යාපනය

தரம் : **8** நேரம்: 2 மணித்தியாலம்

| பெயர் /சுட்டெண்: |
|---|

**பகுதி** I

எல்லா வினாக்களுக்கும் விடைதருக.

♦ 1-5 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

1 பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட சேவை ................................................ ஆகும்.
(வங்கிச் சேவை, கல்விச் சேவை, சுகாதார சேவை)

2. உலக சுகாதார தபானம் ............................................... நோயை முற்றாக ஒழித்த நாடாக இலங்கையை பிரகடனப்படுத்தியுள்ளது.
(மலேரியா, யானைக்கால், போலியோ)

3. கைத்தொழில், தொழில் நுட்ப முன்னேற்றத்தினால் மிக விரைவாக வளர்ச்சியடைந்துள்ள பொதுச் சேவையாக ..................................................... சேவை காணப்படுகின்றது.
(போக்குவரத்து, சுகாதாரம், தொடர்பாடல்)

4. கம்சரிய கிராமிய பிரதேச போக்குவரத்து சேவை .................................... வழங்கப்படும் விஷேட சேவையாகும்.
(மாணவர்களுக்கு, கிராமமக்களுக்கு, தொழிற்சாலை ஊழியர்களுக்கு)

5. தமது உரிமைகளை அனுபவிப்பது ............................................. காணப்படும் சனநாயக பண்பாகும்.
(பாடசாலையில், குடும்பத்தில், விகாரையில்)

♦ ***6-10 வரையுள்ள கூற்றுக்கள் சரியாயின் ( √ ) அடையாளத்தையும் பிழையாயின் (X) அடையாளத்தையும் இடுக.***

6. சனநாயக வாழ்க்கை முறைக்கு பழக்கப்படுத்துவதற்காக பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படும் பாட விதானத்துடன் இணைந்த செயற்பாடாக கல்வி சுற்றுலாவை ஏற்பாடு செய்யலாம். ( )

7. எமது மனதில் தோன்றுகின்ற பல்வேறு எண்ணங்கள் மனவெழுச்சிகளின் இயல்புகளை எமது முகபாவத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம் ( )

8. சனநாயக சமூகத்தில் சகல பிரஜைகளுக்கும் சம உரிமை வழங்கப்படமாட்டாது ( )

9. சமுகத்துக்கு தலைமைத்துவத்தை வழங்குகின்ற நபர்களின் இயல்புகள் செயற்பாடுகளுக்கமைய அத்தலைவர் வகிக்கும் தலைமைத்துவம் ஏற்புடையதாகும் ( )

10. உலகில் பெரும்பாலான நாடுகளில் செயற்படுத்தப்படுவது சனநாயக ஆட்சி முறையாகும்( )

- *படம் **A** அவதானித்து 11-13 வினாக்களுக்கு விடை தருக.*



A

11. A படத்தில் காட்டப்பட்டுள்ள இடம் பௌத்தகளின் மிகவும் புனிதம் வாய்ந்த இடமான ........................................ ஆகும்

12. இவ்விடம் ................................. மாவட்டத்தில் அமைந்துள்ளது.

13. இச்சமய தளத்துடன் சம்பந்தப்படும் மிக முக்கியமான உற்சவம் .............................. ஆகும்

14. இயேசு நாதரின் பிறப்பினை முன்னிட்டு வருடாந்தம் ...................................... நடைபெறும்.

15. முஸ்லிம் மக்களின் புனித பூமியாக ................................ சென்று வழிபடுவது ஹஜ்ஜுப் பெருநாள் ஆகும்.

- ***16-20 வரை தரப்பட்டுள்ள வினாக்களுக்கு மிக பொருத்தமான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.***

16. பூமியின் உட்புறத்தில் நிகழும் பௌதிக செயற்பாடாக கருதக் கூடியது.
    1) சுனாமி  2) சூறாவளி  3) வெள்ளம்  4) எரிமலை

17. இடி மின்னல் மூலம் ஏற்படும் விபத்தை தவிர்த்துக் கொள்வதற்கு பின்பற்ற வேண்டிய செயன்முறை
    1) மக்கள் யாரும் இல்லாத இடத்தில் தரித்திருத்தல்
    2) உயரமான மரத்தடியில் இருத்தல்
    3) மின்சார இணைப்புக்களைத் துண்டித்தல்
    4) திறந்த வெளியில் இருத்தல்

18. இயற்கை அழிவுகளை குறைப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கை,
    1) காடுகளை வெட்டித் தீயிடல்
    2) உக்காத பொருட்களில் பாவனையை அதிகரித்தல்
    3) கண்டல் தவாரங்களை பாதுகாத்தல்
    4) முருகைக் கற்பாறைகளை அகழ்ந்தெடுத்தல்

19. உணவுப் பொருட்களால் ஏற்படும் அனர்த்தங்களை தவிர்த்துக்கொள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை
    1) காலாவதியான உணவுகளை உட்கொள்ளல்
    2) உணவை உரிய முறையில் கழுவி சுத்தம் செய்து உட்கொள்ளல்
    3) அதிகளவு இரசாயன பதார்த்தங்கள் சேர்க்கப்பட்ட உணவுகளை உட்கொள்ளல்
    4) உணவுப் பொருட்களை உரிய முறையில் சமைக்காமல் பயன்படுத்தல்

20. அனர்த்தம் மற்றும் விபத்துக்கள் தொடர்பாக செயலாற்றும் நிறுவனமானது,
    1) கண்தான சங்கம்
    2) சுகாதார சேவை
    3) தீயணைப்புப்படை
    4) செஞ்சிலுவை சங்கம்

(2x20=40 புள்ளி)

## பகுதி II

முதலாம் வினா கட்டாயமானது.
முதலாம் வினாவுக்கும் ஏனைய நான்கு வினாக்களுக்கும் விடை எழுதுக.


01. 1. இலங்கைப் போக்குவரத்து சபையால் செயற்படுத்தப்படும் விஷேட சேவைகள் இரண்டைக் குறிப்பிடுக.
2. பிரித்தானிய ஆட்சி காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பொது சேவைகள் இரண்டைக் குறிப்பிடுக.
3. பாடசாலையினுள் காணக்கூடிய சனநாயக பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக.
4. சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகச் செயற்படும் நிறுவனங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
5. பின்வரும் அட்டவணையில் சமூகத்தில் தலைமைத்துவத்துக்கு உதாரணங்கள் தரப்பட்டுள்ளதோடு அத்தலைமைத் துவத்தை பின்பற்றுவோரை குறிபிட்டு இடைவெளியை நிரப்புக.

| தலைவர் | பின்பற்றுவோர் |
|---|---|
| A தந்தை …………………………… | |
| B அதிபர் …………………………… | |

6. பல்பண்பாட்டுச் சமூகம் நிலவுகின்ற நாடுகள் இரண்டினை எழுதுக.
7. எமது நாட்டில் சமயத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ள கலாச்சாரங்கள் இரண்டினை எழுதுக.
8. விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அழிவை மேலும் குறைப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் இரண்டினை எழுதுக.

(புள்ளி 8×2=16)

02.



A - ...................................



B - ...................................

1. இலங்கையில் பொதுச் சேவை வழங்கும் நிறுவனங்களின் இலட்சணைகள் இரண்டு மேலே A,B படங்களில் காட்டப்பட்டுள்ளன. அவை எந்த நிறுவனங்களுக்குறியன என ஒழுங்கில் எழுதுக. (புள்ளி 2)
2. பொதுச் சேவையான கல்வியால் நடைபெறும் காரியங்கள் மூன்றைப் பெயரிடுக. (புள்ளி 3)
3. நீர், மின்சாரம் என்பன எமக்கு அவசியமான முக்கிய சேவை இரண்டாகும் . இச்சேவைகளை பயன்படுத்தும் நாம் செய்ய வேண்டிய கடமைகள் மூன்று வீதம் வெவ்வேராக எழுதுக. (புள்ளி 6)

03. 1. பண்பாடுபற்றி வரைவிலக்கணங்களை முன்வைத்த நபர்கள் இருவரது பெயர்களை குறிப்பிடுக. (புள்ளி 2)
2. பல்பண்பாட்டு சமூகமொன்றில் காணக்கூடிய குணாம்சங்கள் நான்கை எழுதுக. (புள்ளி 4)
3. தேசிய ஒற்றுமையையும் நிரந்தர சமாதானத்தையும் ஏற்படுத்துவதால் கிடைக்கும் நன்மைகள் ஐந்தை எழுதுக. (புள்ளி 5)

04. 



A - ....................................



B - ....................................

1. சமூகத்தில் காணக்கூடிய குடும்ப வகைகள் மேலே A,B உருக்களால் காட்டப்பட்டுள்ளது. அந்த குடும்ப வகைகள் இரண்டையும் விளக்கி பெயரிடுக. (புள்ளி 2)
2. தலைவர் ஒருவருக்கு இருக்க வேண்டிய குணாம்சங்கள் நான்கை எழுதுக. (புள்ளி 4)
3. குடும்பத்துக்குள் காணப்படும் சனநாயக பண்புகள் ஐந்தைக் கூறுக. (புள்ளி 5)

05. 1. பின்வரும் A,B உருக்களால் காட்டப்பட்டுள்ள இயற்கை அனர்த்தங்கள் இரண்டையும் பெயரிடுக.



A - ....................................



B - ....................................

(புள்ளி 2)

2. A சந்தர்பத்திற்கு செல்வாக்கு செலுத்தும் மனித நடவடிக்கைகள் இரண்டையும் B சந்தர்பத்தினால் ஏற்படும் தாக்கங்கள் இரண்டையும் வெவ்வேறாக எழுதுக. (புள்ளி 4)
3. இயற்கை அனர்த்தங்கள் மூன்றையும் மனித நடவடிக்கை காரணமாக ஏற்படும் விபத்துக்கள் இரண்டையும் பெயரிடுக. (புள்ளி 5)

06. 1. பின்வரும் A,B உருக்களால் காட்டப்பட்டுள்ள விழாக்கள் நடைபெறும் சந்தர்பங்கள் எந்தப்பண்பாட்டிற்கு என முறையாக பெயரிடுக



A



B

(புள்ளி 2)

2. பல்பண்பாட்டுச் சமூகமென்றில் காணக்கூடிய பிரதான பண்புகள் நான்கை எழுதுக. (புள்ளி 4)
3. அ) பௌத்தர்களின் மிக முக்கியமான சமய விழாக்கள் மூன்றை குறிப்பிடுக (புள்ளி 3)
   ஆ) முஸ்லிம்களின் சமய விழாக்கள் இரண்டை குறிப்பிடுக (புள்ளி 2)

07. 1. தற்காலத்தில் முகங்கொடுக்க வேண்டியுள்ள அபாயங்கள், விபத்துக்கள் என்பவற்றை குறைத்துக் கொள்வதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் மூன்றை எழுதுக. (புள்ளி 3)
2. அனர்த்தம், விபத்துக்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கின்ற நிறுவனங்கள் நான்கை பெயரிடுக. (புள்ளி 4)
3. இரசாயன பொருட்கள் உடலில் செல்லக்கூடிய முறைகள் நான்கை எழுதுக.(புள்ளி 4)